(இ) சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளைப் பிடிப்பதில் பயிற்சி பெற்ற குழுவின் மூலம் பன்றி வேட்டை நடத்துகிறது. பொது மக்களின் புகார் உடனடியாகக் கவனிக்கப்படுகிறது. மாநகராட்சி எல்லா வட்டங்களிலும் கால முறைப்படியான பன்றி வேட்டைகளை நடத்தி அதன் மூலமாகக் கட்டுப்படுத்திவருகிறது. பன்றிகள் முறைப்படி பிடிக்கப்பட்டு சாகடிக்கப்படுகின்றன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பன்றிகள் மட்டுமல்லாமல், நகரங்களில் இன்னும் தொல்லை கொடுக்கும் மிருகங்கள்—நாய் போன்றவை—இருக்கின்றன. பன்றிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு, மற்றவகைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்ற அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாநகராட்சியோ அமைச்சரோ இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கேள்வி கேட்ட அங்கத்தினர் முக்கியத்துவம் கொடுத்துக் கேட்ட காரணத்தினுல், பதில் தரப்பட்டுள்ளது.

புலவர் திரு. ஒ. அறிவுடைநம்பி : உயிர் வதை செய்யப்படுகிறது என்று சொன்னுர்கள். 10 அவதாரங்களில் ஒன்றுக வராக அவதாரம் உள்ளது. அதை, உயிர்வதை செய்வதிலிருந்து தடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவதாரம் அதற்குப் பின்னுலே இருந்ததாகச் செய்தியில்லை. அதுவும் ஒரு கால கட்டத்தில் முடிந்து இருக்கிறது. ஆகவே, முடிந்துபோன அவதாரங்களை வைத்துக்கொண்டு இருக்கின்ற எல்லா உயிரினங்களையும் காப்பாற்ற முடியாது.

Thanjavur Medical College.

@93. Q. THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to stat—

(*a*) the number of Assistant Professors and Tutors working in the English and Statistics Departments of the Thanjavur Medical College ;

(*b*) the total work-load of the Departments -;

(*c*) whether the staff in each Department is in excess, when compared to the work-load ; and

(*d*) if so, the action proposed to be taken by the Government in the matter ?

@ 24—11—1973 வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1973 டிசம்பர் 1

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் ஆங்கிலத் துறையிலும், புள்ளி விவரத் துறையிலும் பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர்கள் எத்தனை பேர்? நெறிமுறை ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இத்துறைகளின் மொத்தப் பணிச்சுமையின் அளவு யாது ?

(உ) பணிச் சுமையுடன் ஒப்பிடுகையில் இத்துறைகள் ஒவ்வொன்றிலு முள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளதா ?

(எ) ஆமெனில், இது தொடர்பாக அரசு மேற்கொள்ளக் கருதி யுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) உதவிப் பேராசிரியர்கள் ஆங்கிலத் துறையில் இருவர், புள்ளி விவரத் துறையில் இருவர். உதவி ஆசிரியர் ஆங்கிலத் துறையில் இல்லை. புள்ளிவிவரத் துறையில் ஒருவர்.

(இ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் உள்ள ஆங்கிலத் துறையி லும் புள்ளிவிவரத் துறையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பேராசிரிய பதவிகள் எவையுமின்றி, உதவிப் பேராசிரியர்களாலும், உதவி-ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. சாதாரணமாக அவர்களது பணி நேரம் ஒவ்வொரு வேலை நாளிலும் காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரையாகும்.

(உ) இல்லை.

(எ) இந்த வினாவுக்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I seek a clarification ? The Hon. Minister said that there were two Assistant Professors and he has omitted to say how many Tutors there are in the Department.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, உதவிப் பேராசி ரியர்கள் என்பது அஸிஸ்டெண்ட் புரபொசர்ஸ்; உதவி ஆசிரியர் என்பது டியூட்டர். ஆகவே உதவி ஆசிரியர் என்ற முறையில் டியூட்டராகப் புள்ளி விவரத் துறையில் ஒருவர் மட்டும் இருக்கிறார். ஆங்கிலத் துறையில் யாரும் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, there are three Tutors and two Assistant Professors in the Thanjavur Medical College. As regards their period of work the work they do from morning to evening, all of them put together have got only six hours of work and they are correcting only 150 note-books, while in Arts Colleges each Assistant

1973 டிசம்பர் 1]

Professor has got sixteen hours of work and 200 note-books to correct. While there is a lot of difficulty in getting people for the Arts Colleges, why are these people being wasted in the Medical Colleges ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை அனுப்பி அதற்காகக் கிடைத்த விவரத்திலிருந்து, டியூட்டர் புள்ளிவிவரத் துறையில் மட்டும் ஒருவர் இருக்கிறார். உதவிப் பேராசிரியர் என்பது அசிஸ்டன்ட் புரொபசர்—அவர்கள் புள்ளிவிவரத் துறையில் இரண்டு பேர்களும், ஆங்கிலத் துறையில் இரண்டு பேர்களும் இருக்கிறார்கள் என்று கூறினேன். ஆகவே, இப்போது நியமிக்கப்பட்ட எண்ணிக்கை அதிகம் இல்லை என்பதற்கு எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள், எத்தனை வகுப்புகள் இருக்கின்றன, அவர்களுக்குரிய பாடக் கடமை என்னவென்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தேவைக்கு அதிகமாக நியமிக்கப்படவில்லை என்று தான் தெரிவிக்கப்படுகிறது. டியூட்டர் ஒருவர் மட்டும்தான் இருக்கிறார். ஒரு வேளை திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்லுவது போல், அதிகமாக இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எனக்கு இந்தச் செய்தி கிடைத்து 3 மாதமாகிறது. அதன்படி இரண்டு உதவிப் பேராசிரியர்களும், மூன்று டியூட்டர்களும் அங்கே இருந்தார்கள் என்று தெரியவந்தது. அவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து 6 மணி நேரம்தான் வேலை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். 150 நோட்டுப் புத்தகங்கள்தான் திருத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், கலைக் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் ஒருவர் 16 மணி நேரம் ஒரு வாரத்திற்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். டியூட்டராக இருந்தால், 200 நோட் புத்தகங்கள் திருத்த வேண்டும். அதை அனுசரித்து மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலத் துறையில் அதிகம் பேர் இருந்தால், அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றலாம். புள்ளிவிவரத் துறையைப் பொறுத்த வரையில், அதிகம் பேர் இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்துக்கு வந்தால், அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றலாம் என்று உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். ஆங்கிலத் துறையில், அமைச்சர் அவர்கள் அதே போன்று நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த விவரம் சரியாக இருக்குமானால், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது சரியில்லை. The Director of Medical Education has reported that though there are three sanctioned posts of Tutors in the English Department, all these posts are vacant for the past six months and that the work is being managed by the two Assistant Professors only....என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டியூட்டர்கள் என்பது ஒருவேளை ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையில் குறிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், பணியில் யாரும் இல்லை. ஆகவே, அது தேவையா இல்லையா என்பது இப்போது தரப்பட்ட விவரத்தைக் கொண்டு பரிசீலிக்கப்படும். இப்போது அங்கே பணியில் டியூட்டர் இல்லை என்றுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.